இங்கே தரப்பட்டிருக்கின்றன. அவர்கள்மீது தக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முயற்சியும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆய்வின்போது மேலும் 819 டின்கள் பாமோலின் எண்ணெயும், 3 டேங்கர்களில் 962 டன்கள் பாமோலின் எண்ணெயும் கைப்பற்றப்பட்டுள்ளன. மொத்தத்தில் கைப்பற்றப்பட்டுள்ள பாமோலின் எண்ணெயின் மதிப்பு 2,63,97,995 ரூபாய் ஆகும். கைப்பற்றப்பட்டவைகள் ஏலத்தில் விட கோர்ட் உத்தரவிட்டுள்ளது. குற்றவாளிகளின்மீது கடுமையாக நடவடிக்கை எடுக்க காவல்துறையினர் முயன்று வருகிறார்கள். உணவுத்துறை குற்றப்புலனாய்வுப் பிரிவு பதுக்கலைத் தடுக்க தீவிரமான நடவடிக்கை எடுத்து வருகிறது. 1—1—1980 முதல் 30—6—1980 வரை 550 குற்றங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 343 குற்றங்கள் பதுக்கலுக்குச் சம்பந்தப்பட்டவை. 162 குற்றங்கள் இருப்புகளையும், விலைகளையும் அறிவிக்காததற்காக ஏற்பட்டுள்ள குற்றங்கள். இந்த 550 குற்றங்களில் கைப்பற்றப்பட்டுள்ள இன்றியமையாப் பண்டங்களின் விலை மதிப்பு 3 கோடியே 33 இலட்சம் ரூபாய் ஆகும். 9—6—1980 முதல் 30—6—1980 வரையிலான குறுகிய காலத்தில் மட்டும், 69 குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட பண்டங்களின் விலை மதிப்பு 2 கோடியே 70 இலட்சம் ரூபாய் ஆகும். உணவுத் துறை குற்றப் புலனாய்வுப் பிரிவில் "Anti Hoarding Cell" என்று பதுக்கலை மட்டும் கண்டு பிடிக்க தனி செல் ஏற்படுத்தி, இதற்குக் காவல் துறை உயர் அதிகாரிகளையும் அவர்களுக்குத் துணை அதிகாரிகளையும் நியமித்துத் தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார்கள். இவர்கள்மீது என்னென்ன வகையில் சட்டப்படி வழக்குகளைத் தொடுக்க வேண்டுமென்பதிலேயும் ஈடுபட்டு இருக்கிறார்கள்.

திரு. அன்பில் தர்மலிங்கம் : தலைவரவர்களே, accused என்று இருக்கிறது. அந்தக் குற்றவாளிகளின் பெயர் இல்லை. அவர்களின் பெயரைச் சொல்வதில் என்ன தவறு இருக்கிறது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கவன ஈர்ப்புத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில், பெயர் கொடுத்தவர்கள்தான் கேட்க வேண்டும். மற்றவர்கள் யாரும் எழுந்து கேட்பது கூடாது என்ற முறை இருக்கிறது.

5. தகவல் கோரல்.

பேரவை அலுவலர்களுக்கு பேருந்துகளில் பாஸ் வழங்குவது.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, போன வருஷம் இந்த பட்ஜெட் டிஸ்கஷனின் பொழுது எம்.எல்.எக்களுக்குப் பல சலுகைகளை அறிவித்த பொழுது, குறிப்பாக இந்த அசெம்பிளி

ஸ்டாப்புக்குப் பஸ் பாஸ் கொடுக்க வேண்டுமென்று கேட்ட பொழுது, அப்பொழுது நிதியமைச்சரவர்கள் உத்தரவாதமாக. கொடுக்கப்படும் என்று, அசெம்பிளி நடக்கிறபொழுது—எல்லா நாட்களிலும் அல்ல—அசெம்பிளி நடக்கும் பொழுது அசெம்பிளி ஸ்டாப்புக்குக் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவா: போன தடவை நடந்தது என்றால் அதுபற்றி எழுதிக் கேளுங்கள்.

திரு. ரா. உமாநாத்: கொடுக்கப்படும் என்று அஷ்யூரன்ஸ் கொடுத்தார்கள். பிறகு ஃபைனான்ஸ் மினிஸ்டர் அவர்கள் இன்னொரு செஷனிலே, அப்படி வாக்குறுதி கொடுக்கப்பட்டால் அது கொடுக்கப்படும் என்று தட்டிக் கழித்தார்கள். மூன்று செஷன்கள் முடிந்து விட்டன. இந்த செஷனுக்கும் கொடுக்க வில்லை. கொடுக்கிற வாக்குறுதிக்கு என்ன மதிப்பு? உடனடியாக அந்த வாக்குறுதிப்படி பஸ் பாஸ் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுபற்றி எழுத்து மூலம் கொடுங்கள்.

[முற்பகல் 10-30]

6. 1980-81-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம்—விவாதம்—தொடர்ச்சி.

*திரு. எஸ். ஆண்டித்தேவர்: பேரவைத் தலைவர் அவர்களே, 1980-81-க்கான நிதிநிலை அறிக்கையின் மீது அகில இந்திய பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பாக எனது கருத்தினையும் கூறுவதற்கு அனுமதி அளித்த தலைவருக்கு நன்றியைக் கூறிக் கொள்கிறேன். இப்பொழுது, அவை முன் வைக்கப்பட்டிருக்கிற இந்த நிதிநிலை அறிக்கை ஏழை, எளிய மக்களுக்கு ஒரு நல் வாழ்வு அளிக்கின்ற நிதிநிலை அறிக்கையாக இருக்கிறது என்பதனைக் கூறுவதோடு, இந்த நிதிநிலை அறிக்கையின் மீது எங்களது இயக்கத்தின் சார்பாக நான் வரவேற்று, இந்த நாட்டிலுள்ள ஏழை, எளிய அடித்தளத்து மக்களுக்கு நல் வாய்ப்பளிக்கின்ற நிதிநிலையாக இருக்கிறது என்பதனைக் கூறுவதோடு, இந்த நாட்டில் 100-க்கு 80 விவசாய மக்களுக்கு இதுவரையில் கொடுக்கப்படாத கடன் நிவாரணம்—இந்த அரசால் ரூ. 60 கோடி அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அதையும் குறிப்பாக, 5 ஏக்கர் நிலங்களுக்குக் குறைவாக உள்ளவர்களுக்கும், 5 ஏக்கர் உள்ளவர்களுக்கும் கொடுத்திருப்பதை நான் உளமார வரவேற்கிறேன்.